# காலச்சுவடு

# இரவிக்குமாரின் புரட்டு



கவி

வெளியீடு : பெரியார் பட்டறை

காலச்சுவடு

இரவிக்குமாரின் புரட்டு

கவி

வெளியீடு : பெரியார் பட்டறை

7/11 அலிவலம் சாலை,
சுந்தரவிளாகம், திருவாரூர் 610 001

# தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தந்தை பெரியாரின் போராட்டங்கள்

தாழ்த்தப்பட்டவர்களை பெரியார் அழைக்கும் போது ‘தாழ்த்தப்பட்டச் சகோதரர்கள்’, ‘தீண்டப்படாதச் சகோதரர்கள்’ என்றே அழைக்கின்றார். அவர் தாழ்த்தப்பட்டவர்களை, ‘தமிழர்’ என்பதலிருந்து பிரித்துப் பார்ப்பதில்லை.

சூத்திரர்கள், பார்ப்பனரல்லாதவர்கள் மற்றும் தமிழர்கள் என்பவற்றிலேயே தாழ்த்தப்பட்டவர்களை உள்ளடக்கிப் பேசுகிறார் என்பதை பெரியாரின் பேச்சுகளைப் படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

சில தலித் தலைவர்கள் ‘தலித்’களில் ‘அறிவு ஜீவிகள்’ என்று சொல்லிக் கொள்பவர்கள், ‘பார்ப்பனியம்’ என்பது பார்ப்பனர்களிடமட்டுமல்ல, பார்ப்பனரல்லாதவர்களிடமும் இருக்கிறது, பெரியாரின் ‘பார்ப்பன எதிர்ப்பு’ என்ற கொள்கை நடைமுறைக்கு ஒவ்வாதது. பார்ப்பனர்களில் நல்லவர்களும் உள்ளனர் என்றெல்லாம் 50 பேர், 100 பேர் கூடுகின்ற கருத்தரங்குகளிலும் ‘ஒரு பக்க’ கட்டுரைகளிலும் எழுதி வைத்துள்ளனர்.

மதமாற்றத் தடைச்சட்டத்தின் மூலம் அரங்குக்கு வந்த காஞ்சி சங்கராச்சாரியின் பேச்சுக்கள் இவர்களின் கருத்தாக்கங்களை அம்பலப்படுத்திவிட்டது. இப்போது உண்மையான ‘தலித்’ தலைவர்களும் தலித் மக்களும் சங்கராச்சாரியை எதிர்த்துப் போர்ப்பரணி கொட்டத் தொடங்கிவிட்டனர். இதையும் அவர்கள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சங்கராச்சாரி எழுப்பும் ‘தூய்மைக்’ கோட்பாட்டிற்கு 1926 இலேயே பெரியார்,

> ‘அன்னியர்களைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும் அறியாமையில் – தங்களை மற்றவர்கள் தாழ்மையாக நினைப்பது தங்களுக்கு ஈனமாகத் தோன்றுவதில்லை. இந்த இலட்சணத்தில் உங்களிடம் தப்பிதம் கண்டு பிடித்து உங்கள் உடம்பில் தூர்வாடை அடிக்கிறது. நீங்கள் ஸ்நானம் செய்வதில்லை. துணி துவைப்பதில்லை. மாட்டு மாமிசம் சாப்பிடுகிறீர்கள். மது அருந்துகிறீர்கள். இதை விட்டுவிடுங்கள் என்று ஞான உபதேசம் செய்கிறார்கள். நீங்கள் வேட்டி துவைக்காமலும் குளிக்காமலும் இருப்பதற்கு யார் ஜவாப்தாரி என்பதை அவர்கள் உணருவதில்லை. உங்களுக்கு குடிக்கவே தண்ணீர் இல்லை என்றால் குளிப்பதெப்படி? அழுக்கும் நாற்றமும் உங்கள் கூடப்பிறந்தவையா என்று கேட்கிறேன் (குடிஅரசு, 25.4.1926) ’

என்று பார்ப்பனர்களின் புரட்டுகளை அம்பலப்படுத்தினார்.

‘மதமாற்றம் ஏன்?’ என்பது பற்றி பெரியார்,

> ‘அன்றே சொன்னோம்–அனைவரும் கோயிலுக்குள் அனுமதிக்க முடியாத அந்த கடவுள் அழியட்டும் என்று. அன்று எங்களுக்குக் கிடைத்தது–144 தடையுத்தரவு. நாங்கள் செல்லும் ஊரெல்லாம் கோயில்களுக்குப் போலிஸ் காவல்–எங்கு ஆதி திராவிடர்களைக் கோவிலுக்குள் அழைத்து சென்றுவிடுகிறோமோ என்று. அவ்வளவு எதிர்ப்புக்கிடையேயும் மாதத்திற்கு இரண்டு மாநாடுகள் நடக்கும். எதிர்ப்புக்கு அஞ்சிட்டோமா அன்று. அரசாங்கம் அறிவு பெறுவதாகக் காணோம். அதற்கு ஒரு படி மேலே சென்றோம். பறையனும் பள்ளனும் பார்க்கக் கூடாத கடவுள் இருந்தென்ன? போயென்ன? அதை எடுத்தெறியுங்கள் என்று சொன்னோம். அப்படி தீண்டத்தகாதவராக ஒரு பெரும்பான்மைக் கூட்டத்தை வைத்திருக்கும் மதத்தை விட்டு வெளியேறுங்கள் என்று பறையருக்கும் பள்ளர்க்கும் கூறினோம். அவர்கள் உள்ளத்திலேயே மதம்மாறும் துணிச்சல் ஏற்பட்டதும் எந்தப் பார்ப்பான், எந்த போலிஸ்காரன், எந்த மாஜிஸ்ட்ரேட் எந்த பண்டார சந்நதி எங்கள் முயற்சிக்கு எதிர்ப்பாய் இருந்தார்களோ– அவர்களே பிறகு அதே பறையனையும் பள்ளனையும் மேளதாளத்தோடு கோயிலுக்குள் அழைத்துச் செல்வதைப் பார்த்தோம். பார்க்கிறோம். உள்ளே விட்டால் சாமி செத்து போகும், ஓடிப்போகும் என்று கூறியவர்களே இன்று அதே பறையரையும் பள்ளரையும் கோயிலுக்குள் கூட்டிக் கொண்டு போகிறாரா? இல்லையா? இதோடு திருப்தி அடைந்து விடலாமா? நீங்கள்? (ஈ.வெ.ரா.சி. பக் –96)’

என்று 1948 இலேயே, ஆதிதிராவிடர்களை கோயிலுக்குள் செல்வதை அனுமதித்த வரலாற்றையும் அதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்டவர்கள் ஆலய நுழைவுடன் திருப்தியடைந்துவிடக் கூடாது என்பதையும் கூறுகிறார்.

மதமாற்றம் தடைச் சட்டத்திற்கு எதிர்ப்பு என்றவுடன் சங்கராச்சாரி, ‘சேரிகளை நோக்கிச் செல்லுகிறேன்’, தாழ்த்தப்பட்ட மக்களைப் பார்த்து, ‘குளித்துவிட்டு தூய்மையாக இருங்கள். கூட்டமாக கோயிலுக்குள் செல்லாமல் தனித்தனியாகச் செல்லுங்கள்’ என்று கூறி தாழ்த்தப்பட்டவர்களை அவமானப்படுத்துகிறார்.

மது அருந்துவதாலும் மாட்டிறைச்சி சாப்பிடுவதாலும் ஒருவன் தாழ்த்தப்பட்டவனாக, தீண்டத்தகாதவனாக இழிவுப்படுத்தப்படுவதைக் கண்டிக்கும் தந்தை பெரியார், ‘மதுவையும், மாட்டு மாமிசத்தையும் தள்ளினால்தான் உங்கள் சாதி உயரும் என்று சிலர் சொல்லும் அயோக்கியத்தனமான காரணத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது’ என்று கடுமையாகக் கூறியவர்,

> ‘கோழியும் மீனும், பன்றியும் எச்சிலையும் பூச்சி புழுக்களையும் அழுக்குகளையும் மலத்தையும் தின்கின்றன. இப்படி இருக்க இதைச் சாப்பிடுகிற வடநாட்டு பிராமணர்கள் முதல் தென்னாட்டு சூத்திரர்கள் வரை நல்ல சாதியும் தொடக்கூடியவர்களாக இருக்கும்போது புல்லும் பருத்திக் கொட்டையும் தவிடும் புண்ணாக்கும் தின்கின்ற மாட்டின் இறைச்சி சாப்பிடு வதனால் மாத்திரம் எப்படி ஒருவன் தாழ்ந்தவனாவான்?’

என்று கோபாவேசத்தோடு வினா எழுப்புவதோடு ‘தென்னாட்டு சூத்திரர்கள்’ என்பவர்களையும் குறிப்பிட்டு அவர்களையும் சாடுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களைக் கோவிலுக்குள் அழைத்துச் செல்வது என்பது கூட பெரியாருக்கு சாதி ஒழிப்பு என்ற அளவில் மட்டும்தான்.

‘தீண்டப்படாதவர்கள் மற்றவர்களுடன் சமத்துவமாகக் கோவிலுக்குள் செல்லும் உரிமை பெறுவதன் மூலம் ஓரளவு தீண்டாமை ஒழிகின்றதென்பதையும் சமத் துவம் கிடைக்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம்’ என்று கூறுகின்ற பெரியார், ‘இதுவும் இரயில் வண்டிகளிலும், திருவிழாக்காலங்களிலும் எந்த அளவில் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படுகின்றதோ அந்த அளவில் தான் கோயில் நுழைவினாலும் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படும் என்பதே நமது கருத்தாகும்’ என்று கோவில் நுழைவின் விளைவுகளைப் பற்றி விளக்கியவர், கோயில் நுழைவினால் தீண்டாமை ஒழிவதுடன் ‘சமூக சமத்துவம்’ ஏற்படும்

என்பதையும் வலியுறுத்துகிறார். மேலும், ‘பொது இடத்துக்குப் போகக் கூடிய உரிமை தீண்டாதார்களுக்கும் இருக்க வேண்டும்’ என்றளவிலும் கோவில் நுழைவுப் போராட்டம் பற்றிக் கூறுகிறார் பெரியார்.

பார்ப்பனர்களின் பார்வையில் தாழ்த்தப்பட்டவர்களின் நிலைப்பற்றி தந்தை பெரியார்,

‘தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்ச்சாதி மக்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர் களெல்லாம் பிறவியிலேயே கீழ்மைத் தன்மை அடைந்தவர்கள் என்றும் அவர்கள் கடவுளாலேயே அந்தப்படி பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் கடவுள் செயலையோ மத விதிகளையோ யாரும் மாற்றக் கூடாது என்றும் அவை மாற்றுதலுக்குக் கட்டுப்பட்டவையல்ல என்றும் சொல்லக் கூடிய பலமான அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது’

என்றும் ‘அந்த அஸ்திவாரத்தை இடிப்பது செங்குத்தான மலை மீது தலைகீழாக ஏறுவதற்கு சமம்’ என்றும் கூறுகிறார்.

பறையன், சக்கிலி என்பதற்கு இன்னார்தான் உரிமை என்றும் அது கீழ்சாதி என்பதற்கு இன்னது ஆதாரமென்றும் சொல்லுவதற்கு ஒன்றுமே இல்லை என்று கூறிய பெரியாரை, தாழ்த்தப்பட்டோருக்கு வரலாற்றுச் சான்று ஏதும் கிடையாது என்று சொன்னவர் பெரியார் என்று திரித்துக் கூறும் ‘பொய்யான தலித் தலைவர் களை’ நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

மேலும் சூத்திரரையும் பறையரையும் ஒப்பிடும் பெரியார்,

‘நீங்கள் கோவிலுக்குள் வந்தால் எப்படி கோவிலும் சாமியும் தீட்டுப்பட்டு விடுகின்றதோ அப்படித்தான் நாங்களும் ஒரு இடத்திற்கு மேல் போனால் சாமியும் கோவிலும் தீட்டுப்பட்டு விடுகின்றன. உங்கள் எதிரில் சாப்பிட்டால்–உங்களுடன் சாப்பிட்டால்–உங்கள் வீட்டில் சாப்பிட்டால் எப்படி தோஷமும் பாவமுமான காரியமாகி விடுகின்றதோ அப்படியே எங்கள் வீட்டில்–எங்கள் முன்னாலே–எங்கள் பக்கத்திலே சாப்பிட்டாலும் தோஷம், மோஷம், பாவமென்றுதான் சொல்லப்படுகின்றது’

என்று ஒப்பிட்டு கூறிய பெரியார், பறையருக்கும் சூத்திரருக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை. இருவரையும் பார்ப்பனர்கள் தீண்டாதவர்களாகவே இழிவுப் படுத்துகின்றனர் என்ற உண்மையையும் வெளிப்படுத்துகிறார்.

‘பறையர்’, ‘பள்ளர்’ என்ற சொற்களைப் பற்றி பெரியார்,

‘உங்களைப் பள்ளர் என்றும் பறையர் என்றும் சொல்லுகின்றார்கள். ஆனாலும் பறையர், பள்ளர் என்கின்ற வார்த்தை தொழிலையும் வசிப்பு இடத்தையும் பொறுத்து ஏற்பட்டது. பறையனும் பள்ளனும் அந்தப் பெயரால் சுதந்திரமானவராகவும் இழிவுப்படுத்தத் தகாதவராகவும் இருக்கின்றார்கள்’

என்றும் கூறி பறையரையும் சூத்திரரையும் ஒன்றாகவே பார்க்கின்றார். இவ்வாறு சூத்திரரையும் பறையரையும் ஒப்பிட்ட பெரியார்,

‘திராவிட நாட்டில் எப்படி வெளியிலிருந்து வந்த ஆரியர்களுக்கு–திராவிட மக்கள் தீண்டப்படாதவர்களாக இருக்கின்றார்களோ–அப்படி திராவிடர் களுக்கு ஆதிதிராவிடர்கள்–அதைவிட மேம்பட்ட தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்கள்’

என்று பார்ப்பனரல்லாதாரையும் சாடுகிறார்.



‘இந்த நிலைமை திராவிட சமுதாயத்துக்கே ஒரு பெரும் மானக்கேடான நிலைமை யாகும்’ என்று வேதனைப்பட்ட பெரியார், ‘திராவிடர்களை–ஆரியர்கள் தீண்டப்படாத மக்களென்று வகுத்திருப்பதையும் நடத்துவதையும் அரண் செய்கின்றது’ என்றும் கூறுகின்றார்.

‘ஆகவே ‘ஆதிதிராவிடர்’ என்கிற பெயரே மாற்றப்பட்டு இருவரும் ‘திராவிடர்கள்’ அல்லது ‘தமிழர்கள்’ என்கிற பெயராலேயே வழங்கப்பட வேண்டுமென்பதும், திராவிடருக்கும் ஆதிதிராவிடருக்கும் சமுதாயத் துறையிலுள்ள எல்லா வித்தியாசங்களும் பேதங்களும் ஒழிந்து ஒரே சமூகமாக ஆக வேண்டும் என்பதும் என் ஆசை. உத்தியோகம், கல்வி முதலிய விசயங்களில் ஆதிதிராவிடர் என்பவர்களுக்கு தனிச்சலுகை காட்டி சீக்கிரத்தில் நம்மோடு சரி சமத்துவம் அடையும்படியான நிலைமை ஏற்படுத்த வேண்டியது நம் கட்சியின் தனிப்பட்ட கடமைகளில் ஒன்று ’

என்று 1940–இல் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டின் தலைமையுரையில் பெரியார் குறிப்பிடுகிறார்.

தீண்டாமை ஒழிய வேண்டுமானால், மதத்தைவிட்டு வெளியே வாருங்கள் என்று 1935 இலேயே தந்தை பெரியார் கூறுகிறார்.

‘கடவுள், அதற்கு ஆதாரமான கீதையும் மனு தர்ம சாஸ்திரமும் காப்பாற்றப் படுவதாயிருந்தால் சூத்திரத்தன்மையும் கீழ்ச்சாதித்தன்மையும் தீண்டாமை யும் எப்படி மாற்றப்பட முடியும் என்று யோசித்துப் பாருங்கள். இன்று தீண்டாமை விலக்கு வேலையிலும் சாதி வித்தியாசம் ஒழிப்பு வேலையிலும் ஈடுபட்டிருப்பவர்களில் 100–க்கு 100 பேரும் கீதை, மனுதர்ம சாஸ்திரம் ஆகியவற்றை நம்பும் – ஆதரிக்கும் சோனகிரிகளேயாவார்கள்’.

‘ஆகவே தீண்டாமை ஒழிப்புக்கோ, சாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால் முடியவில்லையானால் மதத்தை விட்டு நீங்களாவது விலகியாக வேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒரு நாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ பறைத் தன்மையோ ஒழியவே ஒழியாது என்பது கல்லு போன்ற உறுதி’

என்ற பெரியார்,

‘உண்மையான விடுதலை உங்களுக்கு வேண்டுமானால் உங்கள் இழிவுக்கும் அடிமைத்தனத்துக்கும் அஸ்திவாரமான ஆதாரத்தை அழிக்க நீங்கள் தைரியம் கொள்ள வேண்டும். அந்த தைரியம் எவ்வித கட்டுப்பாடுகளையும் நம்பிக்கைகளையும் உடைத்தெறியத்தக்கதாயிருக்க வேண்டும்’

என்றும் போராட்டத்துக்கான திசையைக் காட்டுகிறார்.

‘நீங்கள் கீழ்சாதி என்பதும் – தொடக்கூடாதவர்கள் என்பதும்–சமத்துவம் அளிக்காமல் தனியாய் வைக்கப்பட வேண்டியவர்களென்பதும் – ஆகிய காரியங்களுக்கு வெறும் மதமோ பழக்க வழக்கமோ சாஸ்திரமோ, கடவுள் செயலோ என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டமேயாகும். உங்களுக்கு–உங்களுடைய பிரதி பிரயேசனமெல்லாம் உங்களுடைய வயிற்றுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான் – அதுவும் நீங்கள் சாகாமலிருப் பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான் என்பதாக பதினாயிர வருஷங்களுக்கு முன்பாகவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. உங்களுக்கு

ஜீவனத்திற்காக என்று கொடுக்கப்படும் கூலிகளும் உங்கள் மீதுள்ள கருணையினால் என்று நினைத்துவிடாதீர்கள். இந்த ஆகாரமும் இல்லாமல்லாமல் மடிந்து போவீர்களேயானால் நாளைக்கு மேல் சாதிக் காரர்களும் முதலாளிமார்களுக்கும் வேலை செய்ய ஆள் இல்லாமல் போகுமே என்கிற சுயநல கருணையோடுதான்'

என்று சூத்திரர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் எப்படி பார்ப்பனர்கள் அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றனர் என்பதை விவரித்த பெரியார், அவர்களை எதிர்க்க வேண்டிய கட்டாயத்தையும் அதற்கான வழிமுறைகளையும் பின் வருமாறு கூறுகிறார்,

'ஆகவே கீழ்சாதித் தன்மை ஒழிய வேண்டும் என்று கருதுகிற ஒருவன்–அன்னியருக்காக நாம் உழைக்கப் பிறந்தோமென்கிற எண்ணத்தை விட்டுவிட்டு–நமது உழைப்பின் பயனைச் சோம்பேறிகள், பாடுபடாத மக்கள் அனுபவிக்கக் கூடாது என்கின்ற உறுதிகொண்டு–பிறவியில் நமக்கும் மற்றவருக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை என்கின்ற உறுதியோடு சோம்பேறிக் கூட்டத்திற்கு எதிராக எவன் போர் தொடுக்க முனைந்து நிற்கிறானோ அவனே இவ்வித இழிவுகளை நீக்கிக் கொள்ள அருகதையுள்ளவனாக ஆகிறான்'

என்று பெரியார் 'உழைப்பின் பயனைச் சோம்பேறிகளாகிய பார்ப்பனர்கள் அனுபவிக்கக் கூடாது' என்ற பொதுவுடைமைத் தத்துவத்தையும் தொட்டு, 'பின் பிறவியில் நமக்கும் மற்றவர்களுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை' என்ற சாதி ஒழிப்பு நிலையையும் இணைப்பதை இங்கு கவனிக்க வேண்டும். 'மதக் கட்டளையையும் கடவுள் நம்பிக்கையையும் கொண்ட ஒரு அடிமை–ஒரு தாழ்ந்த சாதிக்காரன்–ஒரு நாளும் விடுதலை அடையவோ முன்னேற்றமடையவோ முடியவே முடியாது' என்றும் கூறி, 'தாழ்த்தப்பட்டவர்கள் மதத்தைவிட்டு வெளி யேறுங்கள்' என்று கூறுகிறார்.

'ஆதிதிராவிடர்களுக்கென்று தனித்தொகுதி' என்ற கோரிக்கையை பெரியார் தீவிரமாக ஆதரித்தார். அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன் மற்றும் எம்.சி.இராசா போன்ற தாழ்த்தப்பட்ட தலைவர்களெல்லாம் பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்ட போது அவற்றை எதிர்த்தார் பெரியார். தனித்தொகுதி முறையை எதிர்த்து காந்தியார் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த போது அம்பேத்கருக்கு பல நெருக்குதல்கள் ஏற்பட்டது. எனவே தனித்தொகுதி கோரிக்கையை கைவிட்டு, பூனா ஒப்பந்தத்தில் அம்பேத்கர் கையெழுத்து இட முன்வந்தார். அப்போது ஐரோப்பிய சுற்று பயணத்திலிருந்த பெரியார், 'காந்தியாரின் ஒரு உயிரைவிட பல கோடி தாழ்த்தப்பட்டவர்களின் உயிர் உங்கள் கையில் உள்ளது. எனவே தனித்தொகுதி கோரிக்கையை கைவிட வேண்டாம்' என தந்தி கொடுத்தார்.

பெரியாரின் இந்த நிலைப்பாடு அம்பேத்கருக்கு எதிரானதுதான். இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.இராசா மற்றும் சில தாழ்த்தப்பட்ட தலைவர்களுக்கு எதிரானது தான். ஆனால் இவை தாழ்த்தப்பட்ட மக்களின் குரலை ஓங்கி ஒலித்த பெரியாரின் குரல். ஆனால் இதை பெரியார் அம்பேத்கருக்கு எதிராக செயல்பட்டார் என சில 'தலித்தலைவர்கள்', 'அறிவு ஜீவி' என்று சொல்லிக் கொள்பவர்கள் திரித்துக் கூறுகின்றனர்.

இந்த வரலாற்றை பெரியார்,

'வட்டமேசை மகாநாட்டில் உங்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் ஒதுக்கப் படும்பட்சத்தில் அது தனது தேசாபிமானத்திற்கு விரோதமானதென்றும் உயிரை விட்டாவது உங்கள் தனிப்பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதுதான் தேசாபிமானமென்றும் காந்தியார் சொல்லவில்லையா? கிறித்துவர்கள், முகமதியர்கள், சீக்கியர்கள், நாட்டுக்கோட்டையார்கள் என்கின்ற பிரிவுக்காரர்களும் சாதிக்காரர்களும் தனிப்பிரதிநிதித்துவம் பெறும்போது நீங்கள் தீண்டப்படாதவர்களாய் இருக்கிறவர்கள் – தனிப்பிரதிநிதித்துவம் பெறுவது தேசாபிமானத்துக்கு விரோதமென்றால் அப்படிப்பட்ட தேசாபிமானத்தின் யோக்கியதையை நான் சொல்ல வேண்டுமா என்று கேட்கிறேன்'



என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டியவர் தந்தை பெரியார். இது நடந்தது 1931-32 இல்.

தாழ்த்தப்பட்ட மக்களின் இழிவு நிலையைப் போக்க போராடிய பெரியார்,

'நம்மை தாழ்வுபடுத்துவது எதுவும் நம் முன் நிற்கக்கூடாது. ஆகவே முதலாவதாக உங்கள் போக்கை–முயற்சியை தற்செயலாய்ப் பணக் காரர்கள் மிராசுதாரன் பக்கம் திருப்பாமல் அறிவுபக்கம் திருப்புங்கள். உங்கள் கவனத்தை–முயற்சியை ஆட்சியாளர் பக்கம் திருப்புங்கள்–உங்களுக்கு எது நன்மையானது–எது தீமையானது என்று முதலில் சிந்தித்து தெளிவு அடையுங்கள். எப்படி முயற்சித்தால் நல்ல பயன் ஏற்படும் என்பதையும் நீங்களே சிந்தித்துப் பாருங்கள். சிந்திப்பதில் கெடுதியில்லை. நாம் சமுதாயத்தில் இப்படி இழிவுப்படுத்தப்பட்டிருக்க காரணம் என்ன? நம் சமுதாயம் ஏன் இப்படி பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்? நாம் என்ன தப்பு செய்தோம்? ஏன் நாம் தாழ்மைபடுத்தப் பட்டோம்? நாம் ஏன் உழைத்தும் உண்டிக்குத் திண்டாட வேண்டும்? நம்மால் உழுது விதைத்து அறுக்கப்பட்ட பண்டத்திற்கும் நாம் ஏன் பாடுபடாத சோம்பேறியைக் கெஞ்ச வேண்டும். நமது உழைப்பின் பயன், ஏன் சோம்பேறி மிராசுதாரனுக்கு போய் சேர வேண்டும்? உழாத, விதைக்காத ஒரு சோம்பேறிப் பார்ப்பான் ஏன் உண்டு கொழுக்க வேண்டும்?'

என்று 'நாம்', 'நம்' என்று குறிப்பிடும்போதும் தாழ்த்தப்பட்ட மக்களையும் தமிழர், சூத்திரர் என்பவற்றில் உள்ளடக்கி பெரியார் குறிப்பிடுகிறார் என்பதையும் கவனிக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அவர்கள் தங்களுடைய குணங்களில் எவற்றை ஒதுக்க வேண்டும் என்பதை ஒரு தந்தையின் நிலை யிலிருந்து பெரியார்,

'உங்களிடம் சில குற்றங்கள் இருக்கிறதைச் சொல்லாமலிருக்க முடிய வில்லை. அதாவது நீங்களாகவே உங்கள் சாதிக்கு இழிவு சம்பாதித்துக் கொள்கிறீர்கள். அனாவசியமாக யாரைக் கண்டாலும் 'சாமி' என்று கும்பிடுகிறீர்கள். நீங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் உங்கள் இரத்தத்தில் கலந்து இருக்கிறது'

என்று குறைகளைப் பட்டியலிட்டவர்,

'அதை மாற்றிவிட வேண்டும். ஒரு மனிதனைப் பார்த்தால் அவனுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் என்பது உங்கள் மனத்தில் உதிக்க வேண்டும். நான் ஏன் கக்கூஸ் அல்ல வேண்டும்– நீ ஏன் மல ஜல உபாதைக்குப் போக வேண்டும் – நான் ஏன் உழைக்க வேண்டும்? நீ ஏன்

அதன் பயனை அடைய வேண்டும்? நீ ஏன் உடுக்க வேண்டும்? நான் அறுப்பு அறுக்க வேண்டும்? நீ ஏன் கொண்டு போய்க் கொட்டிக்கொள்ள வேண்டும்?’

என்று துணிந்து கேட்க வேண்டும் என்று தலித்தலைவர்களே கேட்கத் துணியாதவற்றை கேட்க மக்களின் அறிவைத் தூண்டிய பெரியார்,

‘இம்மாதிரியான உறுதியான முறைகளைக் கையாளத் துணியவில்லை யானால் உங்கள் மீது சுமத்தப்பட்ட இழிவு சுலபத்தில் ஒழியாது என்றே சொல்லுவேன். கட்டுப்படவும் கட்டுப்பாட்டை உடைத்து எறியவும் உயிரை விடவும் தயாராய் இல்லாமல் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. அன்றியும் வேறு ஒருவன் வந்து உங்களுக்கு உதவி செய்வான் என்று எதிர்பார்ப்பதும் பெரிய முட்டாள்தனமாகும். உங்களையே நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ள துணிவு கொள்ள வேண்டும்

என்று ஒரு தாழ்த்தப்பட்டவரின் விடுதலையை ஒரு தாழ்த்தப்பட்டவர்தான் வென்றெடுக்க முடியும். வென்றெடுக்க வேண்டும் என்று 1929 இலேயே சொன்னவர் தந்தை பெரியார். ஆனால் இன்று தாழ்த்தப்பட்ட மக்களின் அவல நிலையை அறியாத, தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தவர் என்பதை மட்டும் முதலீடாகக் கொண்டு, குளிர்பாதன அறைக்குள் உட்கார்ந்து கொண்டு பாப்புலர் மீடியா என்ற கொள்கை கொண்டு பார்ப்பனக் கூலியாக சில இதழ்களில் சில பத்திகள் எழுதுபவர்கள் தந்தை பெரியாரை பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதி என்று கூறுகின்றனர்.

இறுதியாக, ‘போலிஸ் உத்தியோகங்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கே கொடுக்க வேண்டும். அவர்களை அக்கிரகாரத்தில் குடியிருக்கச் செய்ய வேண்டும். தீண்டாமை பாராட்டாத சிறந்த கிராமங்களுக்கு பரிசளிக்க வேண்டும் என்று தனது 95 ஆம் பிறந்தநாள் விழா மலருக்காக எழுதிய பெரியார், ‘தாழ்த்தப்பட்டவர் களுக்கென்று தனியாக சேரி கட்டி அங்கே அவர்கள் குடியேறுவதை மாற்ற வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனியாக சேரி இருக்கக் கூடாது’ என்று தனது எதிர் காலச் சிந்தனையையும் இங்கே பெரியார் எடுத்தியம்புகிறார்.

## காலச்சுவடு இரவிக்குமார் பெரியார் மீது எழுதியுள்ள அவதூறு குற்றச்சாட்டுகள்

புதுவை இரவிக்குமார் பெரியார் மீது எழுதியுள்ள அவதூறு குற்றச்சாட்டுகளும் அவற்றுக்கு நமது விடையும்:

1. ‘நம்மில் கீழ்த்தரமக்கள், தலித்துக்களை மிகக் கேவலமாக சித்தரிக்கும் கீழ்த்தர மக்கள் என்ற சொல்லாட்சியை சாதி வெறி பிடித்தவன் கூட பயன்படுத்தியதில்லை. சோறுக்கும் – சீலைக்கும்–காசுக்கும் விலைபோகிற ஒரு கூட்டம் என்று சொல்வது, நம்முடைய சமுதாய எதிரிகள் என்று சித்தரிப்பது, உண்மையில் தலித் பிரச்சினை யில் அக்கறை கொண்டவர்கள் செய்கிற காரியமா?’ என்று இரவிக்குமார் ‘வல்லினம்’ காலாண்டு இதழில் (மே–ஜூலை 2002) எழுதுகிறார்.

இரவிக்குமார் ‘கீழ்த்தரம்’ என்ற சொல்லை எப்படி புரிந்து கொண்டுள்ளார் அல்லது எப்படி திரித்து பொருள் கூறுகிறார் என்பதை புரிந்து கொண்டாலே, பெரியாரை எவ்வாறு அவதூறு செய்கிறார் என்பது விளங்கிவிடும்.

‘கீழ்த்தரம்’ என்ற சொல்லை எந்த நிலையில் பெரியார் கையாள்கிறார் என்பதை



அவரின் பின்வரும் பேச்சை படித்தால் புரிந்து கொள்ளலாம்.

‘நீங்கள் கீழ்சாதி என்றும், பஞ்சமர் என்றும் இழி மக்கள் என்றும் ஹரிஜனங்கள் என்றும் இழிவாகக் கருதப்பட்டு அழைக்கப்பட்டு வருவது மாத்திரமல்லாமல் அந்தப்படி மதம், அரசியல் ஆதாரங்களும் அதாவது சாஸ்திரம், சமயம் முதலியவைகளில் ஸ்திரப்படுத்தியும் நடவடிக்கைகளில் இழிமக்களாக நீங்கள் பெரும்பாலோர் நடத்தப்பட்டு வருவதோடு, அதன் பயனாக நீங்கள் மற்ற மக்களைக் காட்டிலும் சமுதாயம், கல்வி, பொருளாதாரம், வாழ்வு முதலியவைகளில் ‘**கடையராய்**’, ‘**கீழ்த்தர முள்ளவர்களாய்**’ இருக்கின்றீர்கள். உங்களுடைய இந்த இழிநிலை, கடைநிலை, தடை நிலை நீங்க, நீங்க வைக்க, இன்று உங்கள் வசமோ அல்லது வேறு உங்களுக்காகப் பாடுபடுகிற வேறு யார் வசமோ எவ்வித சாதனமும் திட்டமும் முயற்சியும் இல்லை’ என்று ‘விடுதலை’யில் (10.7.47) இல் பெரியார் குறிப்பிடுகிறார்.

இங்கு ‘கீழ்த்தரமுள்ள’ என்ற சொல்லுக்கு ‘கடைநிலை’ என்ற பொருளில்தான் பெரியார் கையாளுகிறார் என்பது புரிகிறது. ஆனால் இரவிக்குமார் இந்த சொல்லை கையிலெடுத்துக்கொண்டு பெரியார் மீது அவதூறு பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் இவர் புரிந்து கொண்ட நிலையில் மட்டுமல்லாமல், திரித்தும் கூறுகிறார்.

2. ‘பெரியாரும் சரி, பெரியாரது இயக்கமும் சரி அம்பேத்கரது நடவடிக்கைகள் தங்களுக்கு உடன்பாடாக இருந்தபோதுதான் அவரைப் பாராட்டினார்கள். அல்லாத போது அவரை கடுமையாக விமர்சித்தார்கள். நீதிக்கட்சி, திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றப்பட்ட போது சிலர் ஜஸ்டிஸ் கட்சி என்ற பழைய பெயரிலேயே கட்சி ஒன்றை நடத்தி வந்தனர். அந்த சமயத்தில் (1944) சென்னைக்கு வந்த அம்பேத்கர் பெரியாரை மதித்து நடக்கும்படி போட்டியாளர்களுக்கு அறிவுரை சொன்னார். இதனால் மனம் குளிர்ந்த பெரியாரும் அவரது ஆதரவாளர்களும் அம்பேத்கரைப் புகழ்ந்து எழுதினார்கள்’.

‘1947 இல் தமிழகத்திலிருந்து தாழ்த்தப்பட்டோர் தலைவர் சிலர் திராவிடர்கழகத்தை விமர்சித்த போது பெரியார் ஆத்திரமடைந்தார். திராவிடர் கழகத்தில் தீண்டாதாரை தக்க வைத்துக்கொள்ள சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதானது. பெரியாரின் பேச்சிலும் அந்த நோக்கம் இருந்தது. அம்பேத்கரை நம் எதிரிகள் சர்க்கார் தாசர் என்று சொல்லக்கூடும் என 1944 இல் எழுதியவர்கள் தாங்களே அப்படி சொல்லத் தொடங்கினார்கள்’ (‘தாய்மண்’ இதழ் சூலை 2002).

இந்த குற்றச்சாட்டில் உண்மையிருக்கிறதா என்று பார்ப்பதற்கு முன் சில வரலாற்று நிகழ்வுகளை நினைவுப்படுத்திக்கொள்வோம்.

‘தாழ்த்தப்பட்டோருக்கான தனி வாக்காளர் தொகுதி முறை’ தாழ்த்தப்பட்டோருக்கு அரசியல், பொருளாதார சமூக உரிமையில் முகாமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்று பெரியார் கருதினார். எனவே இரண்டாவது வட்டமேசை மாநாட்டு கலந்துரையாடல்களில் அம்பேத்கர் அவர்களையும் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களையும் ஆதரித்தும் காந்தி, மாளவியா போன்ற காங்கிரஸ், இந்து மகா சபைத் தலைவர்களைக் கண்டித்தும் வந்தார்.

இந்த சமயத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் மற்றொரு தமிழகத் தலைவர் திரு.எம்.சி. இராசா, இந்திய (நடுவண்) சட்டமன்ற உறுப்பினராக இருந்ததால் இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்கு பிரதிநிதியாக அழைக்கப்படவில்லை. இது தனக்கு ஏற்பட்ட

அவமரியாதை எனக் கருதிய திரு.எம்.சி.இராசா, அம்பேத்கருக்கு எதிர் முகாமில் போய் சேர்ந்து கொண்டார். மேலும் எம்.சி.இராசா-மூஞ்சே ஒப்பந்தத்தைக் கண்டித்தும் அம்பேத்கரை ஆதரித்தும் 'குடிஅரசு' 28.2.1932 மற்றும் 13.3.1932 இதழ்களில் கட்டுரைகளும் ஆசிரியவுரைகளும் எழுதினார் பெரியார்.

எம்.சி.இராசா, அம்பேத்கருக்கு எதிராக காந்தி, மூஞ்சே முதலியோருடன் சேர்ந்து கொண்டது குறித்தும் அம்பேத்கருக்கும் எம்.சி.இராசாவுக்கும் இடையே நடந்த கருத்து மோதல்கள் குறித்தும் Baba Sahib Ambedkar Writings and Speechs Vol.5 (பக்கம் 356-360) Vol.9 (பக்கம் 311-317) என்னும் நூலில் காணலாம்[1].

தாழ்த்தப்பட்டோருக்கான தனி தொகுதி முறை ஏற்பாட்டை கைவிடாததால் 20.9.1932 முதல் சாகும்வரை உண்ணாநோன்பை தொடங்கினார் காந்தியார்.

காந்தியின் உண்ணாநோன்பைக் கண்டித்தும் அம்பேத்கருக்கு ஆதரவாகவும் சுயமரியாதை இயக்கப் பெரிய பொதுக்கூட்டம் 21.9.32 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. எஸ்.வி.லிங்கம் தலைமையில் அ.பொன்னம்பலமும் நாகை என்.பி.காளியப்பனும் பேசினர். 18.9.1932 அன்று சிதம்பரத்தில் சகஜானந்தா தலைமையில் நடைபெற்ற 'ஆதிதிராவிடர்கள் உண்ணாநோன்பைக் கண்டித்து' ஆற்றிய உரையினையும் 'குடிஅரசு' வெளியிட்டது.

காந்தியாரின் உயிரைக் காப்பாற்றும் மனிதாபிமானக் கடமையை நிறை வேற்றுவதா அல்லது தாழ்த்தப்பட்டோரின் உரிமையைக் காப்பாற்றுவதா என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட அம்பேத்கர், பூனா உடன்படிக்கையில் கையெழுத்திட இசைந்தார். எந்த சூழ்நிலையில் அதில் கையெழுத்திட வேண்டியதாயிற்று என்பதை விளக்கி ம.சிங்காரவேலர் (அப்போது அவர் சுயமரியாதை இயக்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்) விடுத்த அறிக்கையை 'அம்பேத்கரின் வெற்றி' என்ற தலைப்பில் 'குடிஅரசு' (2.10.1932) வெளியிட்டது. 'பூனா உடன்படிக்கை' யில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தலைவர்கள் என்று கருதப்பட்ட அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.இராசா மற்றும் அனைத்து தலைவர்களும் கையெழுத்திட்டனர். 'பூனா உடன்படிக்கை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானது' என்று குரல் கொடுத்த ஒரே தலைவர் தந்தை பெரியார்தான். காலமும் இதைத்தான் உறுதி செய்கிறது.

இவ்வாறு தொடர்ந்து அம்பேத்கரை ஆதரித்து வந்த பெரியார் எப்போது எதிர்க்கத் தொடங்கினார்? இந்த எதிர்ப்பு என்பது அயோத்திதாசர் பண்டிதருக்கும் இரட்டை மலை சீனிவாசனுக்கும் இருந்த பகையைப் போன்றதா அல்லது அம்பேத் கருக்கும் எம்.சி.இராசாவுக்கும் இடையிலான பகையைப் போன்றதா அல்லது ஜெகஜீவன் ராமுக்கும் அம்பேத்கருக்கும் இடையிலான பகையைப் போன்றதா என்று கவனிக்க வேண்டும்.

1944 இல் 'வைசிராய் நிர்வாக கவுன்சில்' விரிவுபடுத்தப்பட்டபோது பார்ப்பன ரல்லாதார் பிரதிநிதியாக ஏ. இராமசாமி முதலியாரும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி யாக அம்பேத்கரும் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டனர்.

1946 இல் நடைபெற்ற தேர்தலில் அம்பேத்கர் தலைமையிலான 'ஷெட்யூல் பேரவை' தோல்வி அடைந்தது. அதே ஆண்டு மார்ச் 15 இல் பிரிட்டிஷ் தூதுக்குழு, இந்திய வைசிராய் அறிக்கையினைத் தொடர்ந்து, இடைக்கால அரசாங்கத்தை அமைத்தது. இதில் ஜெகஜீவன்ராம் பெயரும் இடம் பெற்றிருந்தது. ஆனால் அம்பேத்கர் அதில் சேர்க்கப்படவில்லை. அதனால் அம்பேத்கர் சத்தியாகிரகப் போராட்டத்தை அறிவித்து நடத்தினார். மேலும் ஓர் அறிக்கையைத் தயார் செய்து



இலண்டனுக்கே சென்று எல்லா முதன்மையான தலைவர்களுக்கும் அளித்தார். முன்னாள் இந்திய அமைச்சர் சாமுவேல் ஹோரே (டெம்பிள்வுட் பிரபு), பிரதமர் அட்லி, அப்போதைய இந்திய அமைச்சர், லிபரல் கட்சி, தொழிலாளர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆகியோரைச் சந்தித்து இருக்கிறார். இதில் அம்பேத்கர் அவர்களுக்கு பதவியின் கொண்ட ஆசையும் ஜெகஜீவன்ராம் மீது பொறாமையும் மட்டும் காணப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நடந்த நிகழ்வுகளில் அம்பேத்கரின் நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும்.

அரசியலமைப்பு அவையின் கூட்டம் 9.12.46 இல் தொடங்கியது. 1946 இல் மகாண சட்டமன்ற தேர்தலில் தோல்வியடைந்த அம்பேத்கர், வங்காள மகாணத்தில் ஷெட்யூல் பேரவை பெற்ற உறுப்பினர்கள் மூலமும், முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் மூலமும் அரசியலமைப்பு அவை உறுப்பினர் ஆக்கப்பட்டார். அரசியலமைப்பு அவை கூட்டத்தில் அம்பேத்கரை பேசும்படி, அவைத்தலைவர் இராஜேந்திர பிரசாத் அழைத்த நிகழச்சி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. இந்த பேச்சினில்தான் தனது போக்கை மாற்றிக் கொண்டார் அம்பேத்கர். இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டும் என்ற கருத்தை அம்பேத்கர் முன்வைத்தார். இதனால் அம்பேத்கரைப் பற்றிய காங்கிரசின் கண்ணோட்டம் மாறியது. அம்பேத்கரின் மதமாற்ற விருப்பத்தை கேலி பேசி நாடகம் எழுதிய ஆச்சார்ய பி.பே.அத்ரே இனி அம்பேத்கருக்கு எதிராக எதுவும் எழுதுவதில்லை என முடிவு செய்தார்.

இதன் பிறகு வங்காளப் பிரிவினை ஏற்பட்டதால் அரசியலமைப்பு அவையில் அம்பேத்கரின் நியமனம் இரத்தாகிவிட்டது. டாக்டர் ஜெயகர் தனது அவை உறுப்பினர் பதவியிலிருந்து தனிப்பட்ட காரணத்திற்காக விலகினார். அதைத் தொடர்ந்து காங்கிரசு அந்த இடத்திற்கு அம்பேத்கரை தேர்வு செய்தது. 1947 இல் முதல் அமைச்சரவையிலும் அம்பேத்கர் சட்ட அமைச்சரானார்.

இதைத்தான் பெரியார்,

> 'தாழ்த்தப்பட்டோர் சங்கத்திற்கு எனது அருமை நண்பரும் அறிஞருமான டாக்டர் அம்பேத்கர் தலைவராக இருந்து வருகிறார். தாழ்த்தப்பட்டோர் இந்துக்களல்ல என்று மிக ஆதாரத்தோடு ஆரியத்தின் முதுகில் தட்டி ஆணவத்தைக் குறைத்தவர்களில் அவரும் ஒரு முக்கியஸ்தர். பேரறிஞர். நான் எதிர்பார்த்திருந்தேன். அவரின் ஒத்துழைப்பை இவ்வாரியத்தின் கொடுமைகளை ஒழிக்க. ஆனால் எதிர்பாராத விதமாக எந்த ஆரியத்தின் ஆணிவேரை அசைத்து ஆட்டங்கொடுக்கும்படி செய்தாரோ அதே ஆரியத்தின் ஸ்தாபனமாகிய இந்துக்களின் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் இன்று நமது அம்பேத்கரை அடக்கிவிட்டது. இவரும் அத்துடன் உறவு கொண்டுவிட்டார். இன்னும் கூற வேண்டுமானால் இந்திய நாடு பிரிக்கப் படகூடாதென்ற வட நாட்டின் வறண்ட தத்துவத்தை இன்றை நிலையில் பேசுவதைக் கண்டு என் மனம் வருந்துகிறது. இன்னும் சில நாட்களில் திராவிட நாடு பிரிவினையை அவர் எதிர்ப்பாரோ என்று அஞ்சுகின்றேன். எனினும் அவருக்குள்ள சூழ்நிலையில் வடநாட்டுத் தொடர்பில் அப்படித் தான் இருக்க வேண்டியிருக்கிறது போலும். நான் அதைப்பற்றி தப்பாகவோ குறைவாகவோ கூற முன்வரவில்லை. அவர் என்ன? நம் நாட்டிலுள்ள தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களே தாழ்த்தப்பட்டோரின் விடுதலையை குறிக்கோளாகக் கொண்டுள்ள திராவிடர் இயக்கத்தையும் என்னைப் பற்றியும் வீணாகப் பழிக்கிறார்கள் என்றால் வடநாட்டு அம்பேத்கரைப் பற்றி நாம் குறை கூற முடியுமா?[1]

என்று எழுதுகிறார்.

இப்படிப்பட்ட நிலையில்தான் பெரியார் அம்பேத்கரை எதிர்க்கிறார். இதைதான் இரவிக்குமார் பெரியார் தமக்கு ஆதரவாக இருந்த போது அம்பேத்கரை ஆதரித்தார். மற்ற நிலையில் ‘சர்க்கார்தாசர்’ என்றார் என்று தூற்றுகிறார்.

மேலும் 1948 ஆம் ஆண்டு இறுதியில் அம்பேத்கர், ‘விரைவில் சாம்பலாகி அழிந்து போகப் போகிற காங்கிரஸில் தாழ்த்தப்பட்டோர் சேரக்கூடாது’ என்று கூறியதை பெரியார் வரவேற்றார் என்று சா. குருசாமி எழுதியுள்ளார்.

‘இந்து சட்டத்தொகுப்பு மசோதாவை’ கொண்டுவந்து அதனை இந்தியா முழுமைக்கும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அம்பேத்கர் நாடாளு மன்றத்தில் உரை ஆற்றியதை ‘விடுதலை’ 7.2.51 இல் வெளியிட்டது.

பெரம்பூரில் நடந்த திருமண நிகழ்ச்சியொன்றில், அம்பேத்கர் கொண்டுவந்த சாஸ்திரம், சடங்கு இல்லாத திருமண சட்ட மசோதாவை பாராட்டிப் பேசினார் பெரியார். இந்து சட்டத்தொகுப்பு மசோதா குறித்து நடந்த விவாதங்களுக்குப் பதில் கூறி அம்பேத்கர் ஆற்றிய உரை ‘அம்பேத்கரின் சவுக்கடி’ என்ற தலைப்பில் விடுதலை 21.9.1951 இல் வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து, ‘அம்பேத்கர் விலகியது ஏன்?’ என்ற தலைப்பில் ‘விடுதலை’யில் ஆசிரியவுரை தீட்டப்பட்டது. ஆசிரியவுரையின் இறுதியில்,‘டாக்டர் அம்பேத்கர் அறிவாளி, கெட்டிக்காரர், பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும் காங்கிரசுகாரர்களின் தில்லுமுல்லுகளையும் நன்றாக அறிந்தவர். அப்படியிருந்தும் அவரைக் காங்கிரஸ்காரர்களும் பார்ப் பனர்களும் கரும்பாக கருவேப்பில்லையாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதை எடுத்துக்காட்டுகிறோம். பார்ப்பனர்கள், பணக்காரர்கள், வைதீகர்கள் காட்டுகிற ஆசை வார்த்தைகளிலே ஏமாறுகிறவர்களின் கதி டாக்டர் அம்பேத்கரின் கதியாகத்தான் ஆகும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இத்தனை நாள் கழித்தாவது சுயமரியாதை உணர்ச்சி மேலிட்டு அந்த இரும்புத் திரைக் கும்பலைவிட்டு வெளியேறிய டாக்டர் அம்பேத்கரைப் பாராட்டுகிறோம்’ என்று கூறப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து 1954 டிசம்பர் 3 இல் பர்மாவுக்குச் சென்ற பெரியார் அங்கு உலக பவுத்தர் மாநாட்டில் அம்பேத்கருடன் சேர்ந்து கலந்து கொண்டார். அம்பேத்கர் புத்த மதத்தை தழுவியதை வரவேற்றார் பெரியார்.

அம்பேத்கர் மறைந்த போது தந்தை பெரியார் வெளியிட்ட இரங்கல் செய்தியில்,

> ‘காந்தியாரையே ஒரு பத்தாம் பசலி, பிற்போக்குவாதி என்றும் அவரால் பிரமாதமாகப் படிக்கப்பட்டு வந்த கீதையை முட்டாள்களின் உளறல்கள் என்றும் சொன்னதோடு காந்தியாரின் கடவுளான இராமனை மகாக் கொடியவன் என்றும் இராமாயணக்காவியம் எரிக்கத் தகுந்தது என்றும் சொல்லி பல்லாயிரக் கணக்கான மக்களிடையில் இராமாயணத்தைச் சுட்டு எரித்துச் சாம்பலாக்கிக் காட்டினார்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

‘திராவிடர் கழகத்தில் தீண்டாதாரை தக்க வைத்துக்கொள்ள சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதானது’ என்று எழுதிய இரவிக்குமார், அந்த நடவடிக்கைகள் என்னவென்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அதைக் கூறாமல், ‘1944 இல் அம்பேத்கரை நம் எதிரிகள் சர்க்கார்தாசர் என்று சொல்லக்கூடும் என்று சொன்னவர்கள் 1947 இல் தாங்களே அப்படிச் சொல்லத் தொடங்கினார்கள் என்று கூறுவது’, உண்மையில் பெரியார் அப்படி கூறியிருந்தால் தாழ்த்தப்பட்டவர்கள் பெரியாருடன் இருந்திருப்பார்களா? அல்லது பெரியார் அம்பேத்கரை அப்படி



விமர்சிப்பதை தாழ்த்தப்பட்டவர்கள் விரும்பியதால்தான் பெரியாருடன் இருந்தார்களா? மேலும் 1944 இல் மட்டுமா பெரியார் அம்பேத்கரை ஆதரித்தார்? மேலே எடுத்துக்காட்டப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் உணர்த்துவது வேறு என்பது புலனாகிறதே.

மேலும் 1944 இல் அம்பேத்கர் சென்னையில் 4, 5 நாட்கள் தங்கியிருந்தார். அப்போது பல கூட்டங்களில் பேசினார். அவரது பேச்சு குறித்து குடிஅரசு 30.9.44 ஆசிரியவுரை எழுதியுள்ளது. அதில்,

> ‘அதுபோலவே பதவிக்கு அவர் சென்றது முதல் ஒவ்வொரு மூச்சிலும் தன் இனத்தின் பெயரையும் நிலைமையையும் எடுத்துச் சொல்லி சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தன் இனத்தின் எதிரிகளை ஏதாவது காரியங்கள் செய்து கொண்டு எதிரிகளை வெள்ளையாய் கண்டித்துப் பேசி நடுங்கச் செய்கிறார். உத்தியோகம் தனக்கு கிடைக்கத்தக்க விதமாக தனது வாழ்வில் பல அவதாரம் எடுக்காமலும், எதிரிகளிடம் நல்ல பேர் வாங்க அவர்கள் மெச்சும்படி நடக்காமலும், இந்துக்களையும் இந்து மதத்தையும், இராமா யணம், மனுஸ்மிருதி முதலியவைகளையும் பார்ப்பனர்களையும் பச்சையாய் வைது கண்டித்து சிலவற்றைக் கொளுத்த வேண்டும் என்றும் சிலதை தீயில் கொளுத்தியும் நான் இந்து மதத்தை விட்டு வெளியே போய்விடுகிறேன் என்றும், தேசியம் என்பது புரட்டு, தேசிய சர்க்கார் என்பது பார்ப்பன ஆட்சி, தேசிய சர்க்காரைவிட இன்றுள்ள சர்க்கார் ஏன் கேடு என்றால், எந்த சுதந்திர தேசிய சர்க்கார் வந்தாலும் அது பார்ப்பன வர்ணாசிரம சர்க்காராகத்தான் இருக்கும் என்றும் வெடிவெடிக்கும் மாதிரியில் பேசி தன் இன மக்களின் நம்பிக்கையையும் பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டு சட்ட திட்டங்களை லட்சியம் செய்யாமல் பேசி வருகிறார்’

என்று எழுதியது.

1944 இல் வைசிராயின் நிர்வாக கவுன்சில் விரிவுப்படுத்தப்பட்டு அதில் ஏ. இராமசாமி முதலியாரும் அம்பேத்கரும் சேர்க்கப்பட்டபோது, ‘வைசிராய் அறிக்கை’ என்னும் தலைப்பில் வந்த ஆசிரியவுரையில்,

> ‘சர்க்காரார் சர்.இராமசாமி முதலியாருக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் தனிப்பட்ட முறையிலாவது அவர்களுக்கு ஏதாவது செய்துதான் தீரு வார்கள். அவர்களைக் கைவிட மாட்டார்கள். அவர்களது திறமையை, நேர்மையை எவராலும் புறக்கணிக்க முடியாது. இவர்கள் துணிந்து தங்களை திராவிடர்கள் என்றோ, இந்துக்கள் அல்லாதவர்கள் என்றோ சொல்லிக்கொண்டு திராவிடர் கழகத்தை வலுப்படுத்தி திராவிட மக்களின் நன்றியைப் பெற்றிருப்பார்களேயானால் இந்தியாவின் அரசியல் பிரதானக் கட்சிகளில் ஒரு கட்சிக்காரராக இருந்திருக்க முடியும். அப்படிக் கில்லாமல் இவர்கள் தனிப்பட்ட முறையில் சிந்திக்க வேண்டியதானதும் 5 கோடி ஷெட்யூல் வகுப்பார் ஸ்தாபனத்தையும் 5 கோடி திராவிட மக்கள் ஸ்தாபனத்தையும் புறக்கணித்து அலட்சியப்படுத்த நேர்ந்ததும் இந்த திராவிட மக்களுள் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இல்லாமல் போனதே யாகும்’

என்று 1944 இலேயே அம்பேத்கரை விமர்சித்து ‘குடிஅரசு’ எழுதியுள்ளது.

எனவே 1944 இல் ‘அம்பேத்கரை ஆதரித்த பெரியார் மற்றும் அவரது இயக்கத் தவர்கள்’ என்று இரவிக்குமார் கூறுவது பொய் என்று தெரிகிறது. 1944 இலும் அம்பேத்கரை பெரியார் விமர்சித்திருக்கிறார் என்பதுதானே உண்மை நிலை!.

3. பெரியார், அம்பேத்கரை வட நாட்டுக்காரர் என்று கூறுகிறார் என்பது பற்றியும் இரவிக்குமார் கூறுகிறார். 'காங்கிரஸ் இன்று நமது அம்பேத்கரை அடக்கிவிட்டது. இவரும் அத்துடன் உறவு கொண்டுவிட்டார். அவருக்குள்ள சூழ்நிலையில் வடநாட்டுத் தொடர்பில் அப்படித்தான் இருக்க வேண்டியிருக்கிறது போலும். நான் அதைப்பற்றி தப்பாகவோ குறைவாகவோ கூற முன்வரவில்லை. அவர் என்ன? நம் நாட்டிலுள்ள தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களே தாழ்த்தப்பட்டவரின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள திராவிடர் இயக்கத்தையும் என்னைப் பற்றியும் வீணாகப் பழிக்கிறார்கள் என்றால் வடநாட்டு அம்பேத்கரைப் பற்றி நாம் குறை கூற முடியுமா?'. இதில் அம்பேத்கரை வடநாட்டு அம்பேத்கர் என்று பெரியார் சொல்லுகிறார். அவர் வடநாட்டுக்காரரா? இந்திய முழுமைக்கும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரல்லவா? என்று கேள்வி எழுப்புகிறார் இரவிக்குமார்.

இந்த கட்டுரையில் 'நம்நாட்டிலுள்ள தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களே' என்று குறிப்பிடுவது எம்.சி.இராசா மற்றும் தொடக்கக்காலத்தில் அம்பேத்கரின் ஆதரவாளராக இருந்து பின்னர் காங்கிரஸிலிருந்து 1937 இல் சென்னை மாகாணத்தில் இராஜாஜி அமைச்சரவையில் அமைச்சராகவும் ஆன வி.ஜ. முனுசாமி பிள்ளை அவர்களையும்தான் குறிப்பிடுகிறார்[23]. தம்மோடு இருந்தவர் களையும் வடநாட்டில் பிறந்த அம்பேத்கரையும் ஒப்பிடும்போது பெரியார் 'வட நாட்டு அம்பேத்கர்' என்று பெரியார் கூறுகிறார்.

இரவிக்குமார் மேற்கோள்காட்டும் இப்பகுதியிலேயே பெரியார், 'நமது அம்பேத் கரை' என்றுதான் குறிப்பிடுகிறார். எனவே பெரியாரைக் கொச்சைப் படுத்த வேண்டும் என்று எண்ணத்திலேயேயும் அதனால் ஆதாயம் பெற வேண்டும் என்ற நோக்குடனும் இரவிக்குமார் எழுதுவது தெரிகிறது.

4. 'தீண்டாதாருக்கு தாமே ரட்சகன் என்பதான தோற்றத்தை ஏற்படுத்துவதே பெரியாருக்கும் அவரது இயக்கத்தாருக்கும் நோக்கமாயிருந்தது' என்று அடுத்த அவதூறு குற்றச்சாட்டைக் கூறுகிறார் இரவிக்குமார்.

'இரட்சகன்' என்ற சொல் இரவிக்குமாருக்கு தோன்றியது எப்படி? என்பதை முதலில் ஆராயும்போது பல செய்திகள் வெளிவருகின்றன.

அ.மார்க்ஸ் 'களம்புதிது' என்ற இதழில், 'அவர் (இரவிக்குமார்) மறுபடியும் படிக்கத் தொடங்க வேண்டும். கொஞ்சம் நேரம் ஒதுக்கி எழுத வேண்டும்.... பெரியாரை தலித் விரோதியாகச் சித்தரிக்கும் வேலைகளைத் தவிர்க்க வேண்டும். உங்கள் கருத்து உண்மையிலேயே அதுவானால் விரிவான ஆய்வுக்கட்டுரையாக அதை முன் வைத்து ஒரு விவாதத்திற்குத் தயாராக வேண்டும்' என்று எழுதினார்.

இதனால் ஒரு இக்கட்டான நிலைக்கு வந்த இரவிக்குமார், மேலே செல்ல முடியாத நிலையில், ஏற்கனவே சொல்லிவந்ததையே, 'தலித்களை பெரியார் கீழ்த் தரமானவர்கள் என்றும் சோறு–சீலை–காசு ஆகியவற்றுக்காக விலை போகக் கூடியவர்கள் என்றும் கூறினார்' என்று மறுபடியும் கூறத் தொடங்கினார்.

இதற்கு 'தலித்முரசு' இதழின் பொறுப்பாசிரியர் புனித பாண்டியன் அவர்கள், உரிய மறுப்பை எழுதினார்[24]. தொடர்ந்து சில வினாக்களையும் இரவிக்குமாருக்கு முன்வைத்தார். இதனால் இரவிக்குமாருக்கு சிக்கல் வந்துவிட்டது.

'தலித்முரசு' இதழே தனக்கு எதிராக எழுதத் தொடங்கியவுடன் தொல். திருமா வளவன் அவர்களின் இதழான 'தாய்மண்'ணில் தொடர் கட்டுரை எழுதத் தொடங்கினார் இரவிக்குமார்.



ஒன்பது இதழ்களில் சுமார் 18 பக்கங்களில் (அதுவும் பெரிய எழுத்துக்களில், படங்களை வரைந்து பல இடங்கள் நிரப்பப்பட்ட நிலையில்) பெரியாரின் 50 ஆண்டுகால போராட்ட வரலாற்றை திரித்து எழுத முடிவு செய்துவிட்டார்.

ஆனால் எங்கிருந்து தொடங்குவது என்ற குழப்பம் அவரை ஆட்கொண்டது. ஏனெனில் தலித்முரசு பொறுப்பாசிரியரிடமிருந்து எதிர்ப்பு வரத் தொடங்கியதும் அவர் எண்ண ஓட்டத்தில் தடுமாற்றம் வந்துவிட்டது. அந்நிலையில்தான் தோழர் எஸ்.வி.இராசதுரை எழுதிய போது 'பெரியார் : ஆகஸ்ட் 15' என்ற நூல் அவருக்கு நினைவு வந்தது. எஸ்.வி.இராசதுரை இந்நூலை எழுதிய இரவிக்குமார் உடனிருந் திருக்கிறார். எனவே அந்நூலை பார்க்கின்ற படிக்கின்ற வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது. அந்த நூலில் 'பெரியாரும் அம்பேத்கரும்' என்ற ஓர் அத்தியாயம் அவர் கண்ணில்பட்டது. அதில் பல செய்திகள் கிடைக்கின்றன. அந்த அத்தியாயத்தில் உள்ள செய்திகளை வரிசைப்படுத்தி பெரியாரை அவதூறு செய்வதற்கு ஏற்றவாறு திரிக்கத் தொடங்குகிறார்.

தோழர் எஸ்.வி.இராசதுரை அவர்கள், காந்தியார் அவர்களை கேலியாக 'ஹரிஜனங்களின இரட்சகன்' என்று அழைக்கிறார். இதையே இரவிக்குமார் பெரியாருக்குச் சூட்டுகிறார்.

அடுத்து, அம்பேத்கரை வடநாட்டுக்காரர் என்று பெரியார் குறிப்பிடுகிறார். அம்பேத்கர் என்ன வடநாட்டுக்காரரா? அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி அல்லவா என்று குரல் எழுப்புகிறார் இரவிக்குமார். இந்த கருத்தை எங்கிருந்து உருவினார்?

பெரியார்: ஆகஸ்ட் 15 நூலில் 'பதவி மட்டும் போதுமா' என்று தலைப்பில் விடுதலையில் வெளியான ஆசிரிவுரையில் பல செய்திகள் காணப்படுகின்றன. அந்த ஆசிரிவுரையில் இருந்த செய்திகளை உள்வாங்கிக் கொண்டு, அச் செய்தி களை தலைகீழாகப் புரட்டி எழுதுகிறார் இராவிக்குமார்.

தலித் மக்களுக்கென்று இயக்கமோ தலைமையோ இருந்தில்லை என்ற பொய்யை திரும்பத் திரும்பக் கூறி அதை தீண்டத்தகாத மக்களில் சிலர் ஏற்றுக் கொள்கிற நிலையையும் பெரியார் உண்டாக்கினார். திராவிடஸ்தான் கோரிக்கை முன் வைக்கப்பட்ட போது ஆதிதிராவிடஸ்தான் என்ற கோரிக்கையை முனுசாமிப் பிள்ளை போன்ற தாழ்த்தப்பட்ட தலைவர்கள் எழுப்பினார்கள். அதைக் கண்டு 'கோபமுற்ற' பெரியார் திராவிடம், திராவிடர் என்பவை சரித்திரச் சான்றுகளைக் கொண்ட சொற்கள். ஆதிதிராவிடர் என்ற சொல்லுக்கு சரித்திர ஆதாரம் இல்லை என்றார். தீண்டாத மக்களுக்கே சரித்திரம் இல்லை என்று சொன்னவர்கள் அவர்களது கோரிக்கைகளுக்கு சரித்திர ஆதாரம் இருந்ததாக எப்படி ஒப்புக் கொள்வார்கள் என்று இரவிக்குமார் பெரியாரை தூற்றுகிறார்.

தாழ்த்தப்பட்ட தலைவரான வி.ஜ. முனுசாமிப்பிள்ளை என்பவர், இந்திய தூதர்கள் பதவியிலும் ஆதிதிராவிடர்களையே நியமிக்க வேண்டுமென்றும் தென்னிந்தியா வில் திராவிடஸ்தான் ஏற்படுவதானால் ஹரிஜனங்களுக்கு ஆதி திராவிடஸ்தான் தனியாக கொடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கிறார். இவர் 1937 வரை அம்பேத்கரின் ஆதரவாக இருந்து பின்னர் பதவிக்கு ஆசைப்பட்டு காங்கிரஸ்காரராகி 1937 இல் சென்னை மாகாணத்தில் இராஜாஜி அமைச்சரவை யில் அமைச்சராக இருந்தார்.

இப்போது இந்திய தூதர்கள் பதவிக்கு ஆதிதிராவிடர்களை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகிறார். ஆதிதிராவிடர் என்றால் யார்? தனக்குப் பதவி

வேண்டும் என்பதைதான் இப்படி குறிப்பிடுகிறார்.

இதைத்தான் பெரியார், 'பதவி மட்டும் போதுமா?' என்ற ஆசிரியவுரையில் வி.ஐ.முனுசாமிப்பிள்ளையின் பெயரைக் குறிப்பிட்டே சாடுகிறார். மேலும் எந்த தொலைநோக்கும் இல்லாமலேயே, திராவிடஸ்தான் கேட்பதாலேயே ஆதி திராவிடஸ்தான் வேண்டும் என்ற வி.ஐ.முனிசாமிப்பிள்ளைக்கு விடை கூறும் வகையில்,

> 'தோழர் முனுசாமியவர்கள், 'பிள்ளை' என்ற உயர்ந்த ஜாதிப்பட்டத்தை ஒட்ட வைத்துப் பார்த்துங்கூட அவருடைய சமுதாய இழிவு நீங்கவில்லை. மந்திரி வேலை பார்த்துங்கூட பழங்குடி மக்களை ஓரங்குலம் கூட உயர்த்த முடியவில்லை. திராவிடர், திராவிடம் என்பவை சரித்திரச் சான்றுகளைக் கொண்டச் சொற்கள். 'ஆதித் திராவிடம் 'என்ற சொல்லுக்குச் சரித்திர ஆதாரம் இல்லை. திராவிடர்களையே ஆரியம் இவ்வாறு பிரித்து வைத்திருக்கிறது. ஜாதிகளை உண்டாக்கியது போலவே ஒரு சில திராவிடத் தொழிலாளர்களைத் தனியாகப் பிரித்து 'சண்டாளர்கள்' என்று கூறி வருகிறது, இந்து மதம் என்னும் ஆரியக் கோட்பாடு. இவைகள் வரலாறு கூறும் உண்மை. இவைகளை யுணராத தோழர் முனுசாமி அவர்கள் ஆதிதிராவிடர்கள் என்றென்றும் சேரிகளிலேயே இருக்க வேண்டும் என்றும், தம்மைப் போன்ற ஒரு சிலர் அவர்கள் சார்பில் மந்திரிகளாக இருக்க வேண்டுமென்றும் கருதி ஆதிதிராவிடஸ்தான் வேண்டும் என்று பிதற்றியிருக்கிறார்'

என்று எழுதுகிறார் பெரியார்.

ஆதிதிராவிடர்களுக்கு வரலாற்றுச் சான்றே இல்லை என்று சொன்னவர் பெரியார் என்று அவதூறை கூறிய இரவிக்குமார், இதன்பின் வி.ஐ.முனுசாமி என்ன செய்தார் என்பதை விளக்கியிருக்க வேண்டாமா? அல்லது தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதிதிராவிடர் இனத் தலைவர்கள் ஆதி திராவிடஸ்தானுக்காகப் போராடிய வரலாறு என்ன என்பதை விளக்கியிருக்க வேண்டாமா?

5. பெரியார் தலித் மக்களுக்கு எதிரி என்று அவதூறை கிளப்பிய இரவிக்குமார் அடுத்து, சிறுபான்மை மக்களுக்கு எதிரி பெரியார் என்று கூறுகிறார்.

'நம் தாழ்மைக்குக் காரணம்' என்ற தலைப்பில் 1943 இல் எழுதிய கட்டுரையில் தமிழர் இழிவுக்கான காரணங்களென ஐந்து காரணங்களை குறிப்பிடுகிறார் பெரியார். தமிழன் என்றால் இதில் பார்ப்பான், முஸ்லிம், கிறித்துவர் முதலிய பலர் சேர்கிறார்கள். யாரையாவது நாம் சேர்ப்பதில்லை என்றால் அவர்கள் நானும் தமிழன். தமிழ்நாட்டில் பிறந்தவன் தமிழ் பேசுகிறவன் என்கிறார்கள் எனக் குறிப் பிடுகிறார் பெரியார். அதாவது பார்ப்பான் மட்டுமல்ல, முஸ்லிமும் கிறித்துவனும் தன்னைத் தமிழன் என்று கூறிக்கொள்வதால் தமிழர் இழிவு நிலை அடைந்திருக் கிறார்கள் என்கிறார் பெரியார். சிறுபான்மையினரைப் பற்றி எதிரான அபிப்ராயம் எப்போதும் பெரியாரிடம் இருந்தே வந்திருக்கிறது. பார்ப்பனரல்லாதாரின் உரிமைகளை வென்றெடுக்க பெரியார் உபயோகித்த பெரும்பான்மை என்ற கருத்தாக்கம் தற்போது இந்துத்துவவாதிகள் முன் வைக்கும் பெரும்பான்மை என்ற கருத்தாக்கத்தோடு பெருமளவில் ஒத்துப்போவதையே நான் கவனப்படுத்த விரும்புகிறேன் என்று 'புதிய' கண்டுபிடிப்புகளையும் 'வியக்க' வைக்கும் ஆய்வு களையும் தருகிறார் இரவிக்குமார்.அண்ணல் அம்பேத்தரும் எம்.சி.இராசா அவர்களும் இந்து மகாசபையினருடன் இணைந்து பணியாற்றினர் என்பதை



வசதியா மறந்துவிட்டு பெரியார் மீது அவதூறு கூறுவதிலேயே குறியாக இருக்கிறார்.

6. 'அயோத்திதாசப் பண்டிதர் குறித்து பெரியார் கடைப்பிடித்த மவுனம் எதேச்சையானதுதானா?' என்று யோசிக்க வேண்டும் என்று அடுத்து எழுதுகிறார்.

என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் முன்னோடி களாக இருந்தவர்கள் - பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் ஜி.அப்பாதுரையாரும்தான் என்று பெரியார் வெளிப்படையாகவே தமது 68 வது பிறந்த நாள் விழாவில் பெங்களூரில் பேசியிருக்கிறார்[27]. இதை மேற்கோள்காட்டி புனித பாண்டியன் அவர்கள் பல்வேறு கேள்விகளை இரவிக்குமாரை நோக்கி எழுப்பியிருக்கிறார். அதுமட்டுமல்ல குடிஅரசு இதழில் அயோத்திதாசரின் நூல்களை அறிமுகம் செய்தும் அதைப்படிக்க வலியுறுத்தியும் தொடர்ச்சியாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் சகோதரியை திருமணம் செய்து கொண்டவர் அயோத்திதாசர். எனவே அயோத்திதாசரின் அறிவைப் பற்றி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருந்திருக்கும். 'ஒருபைசா தமிழன்' என்று முதலிலும் பின்பு 'தமிழன்' என்று பெயர் மாற்றியும் வார இதழ் நடத்திய செய்தியும் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு தெரிந்திருக்கும். ஆனால் தனது ஜீவ சரித்திர வரலாற்று நூலில் ஒரு இடத்தில் கூட அயோத்திதாசரின் பெயரை இரட்டைமலை சீனிவாசன் குறிப்பிடவில்லை. தலித் அரசியலில் முதல் ஜீவ சரித்திர வரலாற்று நூல் என்று சொல்லப்படுகின்ற அதில், பெரியாரின் பெயரும் இல்லை. நீதிக்கட்சியுடனும் பெரியாருடனும் இணைந்து பணியாற்றியவர். பதவிகளைப் பெற்றவர் இரட்டைமலை சீனிவாசன். அயோத்தி தாசர் குறித்தும் பெரியார் குறித்தும் இவருடைய மவுனம் எதேச்சையானதுதானா என்று இரவிக்குமார் எழுத வேண்டாமா?

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தென்னாட்டில் நடந்த சம்பவம்தான் தாழ்த்தப் பட்ட மக்களுக்காக நான் போராட காரணமாக இருந்தது என்று எழுதியவர் பெரியாரைப் பற்றி ஒரு சில இடங்களைத் தவிர மற்றபடி ஏதாவது எழுதி யிருக்கிறாரா?

இரட்டைமலை சீனிவாசனும் அம்பேத்கரும் இணைந்து பணியாற்றியவர்கள். அயோத்திதாசர் இரட்டைமலை சீனிவாசனுக்கு மைத்துனர். எனவே இரட்டைமலை சீனிவாசன் அயோத்திதாசர் பற்றி அம்பேத்கரிடம் சொல்லவில்லையா? சொல்லவில்லை என்றால் ஏன் சொல்லவில்லை? சொல்லியிருந்தார் என்றால் அம்பேத்கர் ஏன் அயோத்திதாசரைப் பற்றி குறிப்பிடவில்லை? பல பட்டங்களைப் பெற்றவர், பல நூல்களைக் கற்றவர் அண்ணல் அம்பேத்கர். அவருக்கு அயோத்திதாசரைப் பற்றி தெரிந்திருக்க நியாயமில்லையா? பெரியாருடைய போராட்டத்தைப் பற்றி தெரிந்திருந்த அம்பேத்கருக்கு அயோத்திதாசரின் ஆய்வுகள் பற்றி, செயல்பாடுகள் பற்றி தெரியவில்லையா? அல்லது அயோத்தி தாசரின் செயல்பாடுகள் அந்த அளவில்தான் இருந்ததா? இதையெல்லாம் இரவிக்குமார் விளக்க வேண்டாமா?